Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR 63/2025

ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே! மற்றும் அன்பு இறைமக்களே!

அக்டோபர் மாதம் 5 முதல் 10 வரை நமது மறைமாவட்டட அருட்தந்தையர்களுக்கு வருடாந்திர தியானம் நடைபெற்றது. தியானம் வெற்றியடைய வேண்டுதல் செய்த உங்கள் அனைவருக்கும் முதலாவதாக நன்றியைத் தெரிவிக்கின்றேன். தியானத்தின் இறுதி நாளில் அருட்தந்தையர்களுள் பகிர்ந்தளித்த ஒரு சில முக்கியமான செய்திகளை உங்களுக்கு தெரிவிக்க இதை நான் எழுதுகிறேன்.

பேரருள்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் நமது மறைமாவட்டத்தின் ஐந்தாவது குருகுல முதல்வராக 2019 மே 24 முதல் 2025 அக்டோபர் 10 வரை சிறப்புற பணியாற்றினார். நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்தின் பங்குதந்தையாகவும் அல்போன்சா பள்ளியின் தாளாளராகவும் 26 ஆண்டுகள் சிறப்பாகச் பணி செய்த பின்பே பேரருள்தந்தை அவர்கள் மறைமாவட்ட குருகுல முதல்வராக பொறுப்பேற்றார். நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலமும் அங்கு செயல்படும் பள்ளியும்; கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை மறைமாவட்டத்தின் முக்கிய அடையாளமாக இன்று மாறியதன் பின்னர்; பேரருள்தந்தை அவர்கள், இறைவன்மீது கொண்ட உறுதியான நம்பிக்கையும் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் ஜெப வாழ்க்கையும் காரணமாகும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராக கடந்த $6^{1}/_{2}$ ஆண்டுகளாக மிக முக்கியமான பொறுப்புகளை மிகுந்த முதிர்ச்சியுடனும் அர்ப்பணிப்புடனும் செய்து வந்தார். மறைமாவட்ட ஆயருக்கு அடுத்த மேய்ப்பு பணிகளில் நிழல்போல் துணையாக இருந்து தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் தந்தார். குருக்களுடனும் துறவியர்களுடனும் இறைமக்களுடனும் உடன்பயணித்து, தனது அனுபவங்களையும் ஆன்மீக வலிமையையும் மறைமாவட்ட வளர்ச்சிக்காகவே பயன்படுத்தி வந்தார்.

சில நாட்களாக உடல்நலக் குறைவால் சிறப்பு மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார். ஆகவே மருத்துவர்கள் அவருக்கு சிறிது காலம் முழுமையான ஓய்வு அவசியம் என்று அறிவுறுத்தினர். எனவே 2025 அக்டோபர் 10 முதல் குருகுல முதல்வரின் எல்லா பணிகளிலிருந்தும் பேரருள்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் முற்றிலும் விலகி, மருத்துவர்கள் பரிந்துரைக்கும் ஓய்வு காலத்தில் இருக்கின்றார். அவர் செய்த அனைத்து சேவைகளையும் ஆன்மீகப் பணிகளையும் நினைவு கூர்ந்து, மறைமாவட்ட

இறைமக்களின் சார்பாகவும் எனது தனிப்பட்ட முறையிலும் இதயம் நிறைந்த நன்றியையும் இறையாசியையும் தெரிவிக்கிறேன். மேலும், அவர் விரைவில் குணமடைந்து மறைமாவட்டத்தின் பிற மேய்ப்பு பணிகளில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகிறேன்.

மறைமாவட்ட புதிய குருகுல முதல்வர்

பேரருள்தந்தை தோமஸ் அவர்களுக்கு பதிலாக, மறைமாவட்டத்தின் முழு நலனை கருத்தில் கொண்டு முன்னாள் குருகுல முதல்வராக பணியாற்றிய பேரருட்தந்தை ஜோஸ் முட்டதுப்பாடம் அவர்கள் மறைமாவட்டத்தின் புதிய குருகுல முதல்வராக நியமனம் செய்யப்பட்டதை அதிகாரபூர்வமாக உங்களிடம் அறிவிக்கின்றேன். அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, அவருடைய பணிகள் இறையாசீருடன் அமையட்டும் என்று நாம் இணைந்து வேண்டுவோம்.

செபமாலைப் பவனி

நமது மறைமாவட்டத்தில் செயல்படுத்தவிருக்கும் ஒரு சில முக்கிய நிகழ்வுகளைப்பற்றி இந்நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன். மரியாயின் சேனை தலைமையில் நமது மறைமாவட்டத்தில் நடத்தப்படும் ஜெபமாலை பவனிப் இவ்வருடம் அக்டோபர் மாதம் 26-ம் தேதி அதாவது வருகின்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. அன்றைய நாள் இப்பவனி மதியம் 2 மணிக்கு மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்திலிருந்து தொடங்கி மாலைக்கோடு திருச்சிலுவை திருத்தல ஆலயத்தில் வந்தடையும். அன்னை மரியாவின் பக்தியை வெளிப்படுத்தும் நல்நிகழ்வாக இதை நாம் மாற்றுவோம். பங்குகளிலிருந்து திரளான இறைமக்கள் பங்கேற்று அன்னையின் பரிந்துரையை புகழ்பாடி இறையருள் வேண்டக்கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்டதினம்

1996 நவம்பர் 11-இல் உருவான நமது மறைமாட்டம் இவ்வருடம் வளர்ச்சியின் 29-வது ஆண்டை நிறைவு செய்கிறது. எனவே நம்பம்பர் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியுடன் இணைந்து மறைமாவட்ட தினத்தை கொண்டாடும்படி நினைவூட்டுகிறேன். இந்நாளுக்கான தயாரிப்பாக நவம்பர் 7-ம் தேதி வெள்ளிக்கிழமை நமது மறைமாவட்டத்தின் அனைத்து பங்குகளிலும், கன்னியர் இல்லங்களிலும், நிறுவனங்களிலும் 1 மணி நேரம் நற்கருணை ஆராதனை நடத்த வேண்டும். இறைமக்களின் மிகுந்த பங்களிப்புடன் இவ்வாரதனையை சிறப்பாக நடத்துபடி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மறைமாவட்ட தினம் கொண்டாங்களுக்கான வழிக்காட்டுதல்கள் பின்னர் வழங்கப்படும்.

சிறுமலர் இயக்கப் பேரணி

சிறுமலர் மிஷன்லீக் தலைமையில் எல்லா வருடமும் நடத்துகின்ற பேரணி இவ்வாண்டும் நவம்பர் மாதம் 16-ம் தேதி நடத்தப்படுகிறது. இப்பயணம் பிற்பகல் 2 மணிக்கு கருங்கல் சி.எஸ்.ஐ ஆலயத்திலிருந்து தொடங்கி சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தில் நிறைவடையும். எனவே பங்குதந்தையர்கள், மிஷன்லீக் உறுப்பினர்கள் அனைவரையும் றாலி-இல் பங்கேற்க வைக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன். இறைவன் நம் அனைத்து முயற்சிகளையும் பலமிக்கதாக்கட்டும்.

மறைபரப்பு ஞாயிறு

2025 அக்டோபர் 19 ஞாயிற்றுக்கிழமை; அதாவது இன்று மறைபரப்பு ஞாயிறை அனுசரிக்கிறோம். உலகெங்கும் உள்ள மறைப்பரப்பு பணிக்களுக்காக ஜெபிக்கவும், பொருளுதவி செய்யவும், இந்நாள் நமக்கு உதவுகிறது. மறைபரப்பு கவர் வழியாக பணம் கொடுப்பதோடு, உணவு விழா, பயன்படா பொருட்களை விற்று பணமாக்குதல் சிறப்பு காணிக்கை பவனி போன்றவை வழியாகவும் மறைபரப்பு பணிக்காக நீங்கள் பணம் சேகரிக்கலாம். அப்பணம் மறைமாவட்டம் வழியாக உலகளாவிய சபையின் மறைபரப்பு பணிகளுக்காக உரோமைக்கு அனுப்பப்படும். ஜெபத்துடனும் முழுமனதுடனும் திருத்தொண்டு பணிகளை ஆதரிக்க நாம் ஒற்றிணைவோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக நம் தாயான தூயகன்னி மரியாவின் பரிந்துரை எப்போதும் நம்மோடு இருக்கட்டும்.

ஈசோ மெசியாவில் அன்புடன்

ஆயர் இல்லம்
15.10.2025

✝ **ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்டம்

குறிப்பு : இச்சுற்றுமடலை அக்டோபர் 19, 2025 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்டத்திலுள்ள ஆலயங்கள், நிறுவனங்கள் என அனைத்திலும் திருப்பலிக்கு பின் வாசிக்க வேண்டும்.